1970 மார்ச் 4]

திரு. பி. ஜி. கருத்திருமன் : இதில் உள்ளது உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல. சபையில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளை அறிவிப்பதில் கூட இனிஷியல்ஸ் மாறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெயர்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் பெரிய தவறுகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. மகாதேவன் பிள்ளை என்ற பெயர் ஜேம்ஸ் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் ஏற்பட்டால் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இவ்வளவு சிரமப்பட்டு வந்து கலந்துக்கொண்டிருக்கும்போது பெயர்களை மாற்றுவது, இனிஷியல்ஸை மாற்றுவது போன்ற தவறுகள் நடந்துகொண்டிருக்கின்றன. தயவு செய்து இதைக் கவனித்து இனிமேல் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த ப்ரொவைஸோ எப்படித் திருத்தப்பட்டது என்பது தங்களுக்கு நினைவிருக்குமென்று நான் நம்புகிறேன். இதுபோன்று உரிமைப் பிரச்னை கொண்டுவரும் போது முன்கூட்டி எழுத்துமூலம் கொடுக்காமல் எடுக்கப்படக் கூடாது என்று முன்னால் இருந்த அமைச்சர் அவர்கள் எழுப்பி, அந்தத் தரப்பிலிருந்த நாங்கள் அப்படிக் கொண்டுவரக்கூடாது என்று எழுப்பி பின்னால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தத்திற்கு நீங்கள் கொடுத்த விளக்கம் நிற்கவேண்டுமென்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அப்போது கூட நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு உரிமைப் பிரச்சினை கொண்டுவரும்போது கூட உங்கள் அனுமதி இல்லாமல் கொண்டுவர முடியாது.

The Speaker has got to waive notice. Suppose he says ' I am not prepared to waive notice ', then no member can raise the matter.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியதை, நண்பர் அவர்கள் முன்பே சுட்டிக்காட்டியிருந்தால், இவ்வளவு நீண்ட விவாதம் ஏற்பட்டிருக்காது. மகாதேவன் பிள்ளையை ஜேம்ஸ் என்றும், ' எல் ' என்ற இன்ஷியல்ஸ் ' என் ' என்றும் அச்சடிக்கப்பட்டு விட்டது என்ற தவறுக்காகவும் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்து இவ்வளவு நீண்ட நேரம் செலவழித்திருக்கவேண்டியதில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் தவறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், அலுவலகத்தில் உள்ளவர்கள் அதைத் திருத்திக்கொள்ள ஏதுவாக இருந்திருக்கும்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

(அ) மதுரை வடக்கு தாலூகா குளமங்கலம் கிராமத்தில் போடப்பட்ட தடையுத்தரவால் ஏற்பட்டுள்ள பீதியும் பரபரப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருமதி கே. பி. ஜானகியம்மாள் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"மதுரை வடக்குத் தாலூகா குளமங்கலம் கிராமத்தில் ஊராட்சி மன்றத் தலைவருக்கும், ஒருசில விவசாயிகளுக்கும் நடந்த வாய்த் தகராறைக் காரணமாகக் கொண்டு 15-2-1970 அன்று அக்கிராமத்தில் 144 தடை உத்தரவு போட்டும், லாரியில் போலீஸ் கொண்டு இறக்கி முகாமிட்டுள்ளது. இதனால் கிராமத்தில் பொது மக்கள் நடமாடவும், அறுவடைக்குச் செல்லவும் முடியாது பீதியும், பரபரப்பும் அடைந்துள்ளார்கள். ஆகையால் இந்தப் பரபரப்பான பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டும்" என்று கோரியுள்ளார்கள்.

இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது, மேலும் நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து கூற வாய்ப்பிருப்பதால், இதற்கு அனுமதி தர நான் மறுக்கிறேன்.

(ஆ) கச்சத் தீவிலுள்ள புனித அந்தோனியார் கோவில் திருவிழாவிற்கு தமிழகக் கத்தோலிக்கர் செல்ல இலங்கை அரசு விதித்துள்ள கட்டுப்பாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. டி. மார்டின் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத்தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதில்—

"இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத் தீவில் உள்ள புனித அந்தோனியார் கோவிலில் நடக்கும் திருவிழா வைபவத்திற்கு தமிழக கத்தோலிக்க மக்கள் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடு தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்தும் அவர்கள் புனித அந்தோணியார் கோவிலுக்கு வழக்கம்போல் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது." ஆகவே சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. டி. மார்டின் :** தலைவர் அவர்களே, இந்தியாவிற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்தக் கச்சத் தீவில் வருடா வருடம் மார்ச் மாதம் அங்குள்ள புனித அந்தோனியர் கோவிலில் திருவிழா நடப்பதும், தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான கத்தோலிக்கப் பெருமக்களும் மற்றவர்களும் அங்கு சென்று திருவிழாவில் பங்கு